5th September 1958]

Old Assembly Buildings

* 68 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மவுண்ட் ரோடு கவர்ன்மெண்டு எஸ்டேட்டிலிருக்கும் பழைய அசெம்பிளி கட்டிடத்தை என்னென்ன காரியங்களுக்காக உபயோகப்படுத்திக் கொள்வதற்காக கவர்ன்மெண்டார் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள் ?

The Hon. Sri P. KAKKAN : The Assembly Hall attached to the Old Assembly Building in the Government Estate has been converted into a children's theatre. The remaining rooms in the building will be utilised to accommodate some of the Government Offices which require accommodation or which have rented accommodation elsewhere.

Sri M. KALYANASUNDARAM : ஸார், இதுவரை குழந்தைகளுக்காக அங்கு எத்தனை படங்கள் காண்பிக்கப்பட்டன ? அதன் மூலம் கிடைத்த வருமானம் என்ன ?

The Hon. Sri P. KAKKAN : இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : What is the amount spent so far by the Government for the improvement of this building?

The Hon. Sri P. KAKKAN : I require separate notice for the question.

Sri D. S. AUTHIMOOLAM : இந்த அசெம்பிளி ஹாலை விட அந்த அசெம்பிளி ஹால் பொதுமக்களுக்கு கூடுதல் வசதியாக இருக்கிறது என்பதை இந்த சர்க்கார் நம்புகிறதா ? இல்லையா ?

The Hon. Sri P. KAKKAN : இப்போது நம்பவில்லை.

Sri K. VINAYAKAM : இந்த கட்டிடம் நம்முடைய நாட்டின் தலைவராக இருக்கும் ஸ்ரீ நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னால் இது வரையிலும் ஒரு படம்கூட போட்டு காண்பிக்கப்பட வில்லை என்று சொல்வது சரிதானா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : படம் காண்பிப்பதற்கு அந்த கட்டிடத்தில் சில மாறுதல்கள் செய்யவேண்டியிருக்கிறது. சர்க்கார் கட்டிடமாயிருந்தாலும் சில விதிகளின்படி சில மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்விதம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மாத மத்தியில் தொடர்ந்து காட்சிகள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் தெரி வித்துக்கொள்கிறேன்.

Sri A. GOVINDASAMY : இங்கு காண்பிப்பதற்கான சினிமாப் படம் எடுத்தாய் விட்டதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : படம் எடுக்கின்றவர்களை கேட்டால் அது தெரியும்.

Sri V. SANKARAN : இப்போது கோட்டையில் குறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருக்கும் மியூஸியத்தை அங்கு கொண்டு போனால், இந்த கட்டிடத்தை இங்கு சர்க்கார் ஆபீஸ்களுக்கு உபயோகப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். இந்த யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களா?

The Hon. Sri P. KAKKAN : நோட்டீஸ் வேண்டும்.